Registered as a News Paper    பக்கங்கள் 4    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆடி 19    03 - 08 - 1992    திங்கட்கிழமை    ஓசை 167

## கடந்த ஒரு மாதத்தில் 220 இராணுவம் பலி

[யாழ்ப்பாணம்]

வடக்கு - கிழக்கில் இராணுவத்தினர் மீதான புலிகளின் தாக்குதல்களில் கடந்த மாதம் மட்டும் 220 இற்கும் அதிகமான சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் 179 துப்பாக்கிகள் 02 மோட்டார்கள், ஆர் பி ஜி. உட்பட பெருந்தொகையான இராணுவத் தளபாடங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. மேலும் இரண்டு இராணுவ முகாம்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. வை - 8 ரக சீனச் சகடை விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. 15ற்கு மேற்பட்ட இராணுவ வாகனங்கள் புலிகளால் தகர்க்கப்பட்டன.

# சிறிலங்கா விமானப் படையினுள் குழப்பம்; புலிகளுக்கு எதிராகப் போரிட அச்சம்

## சண்டையிட அரசு வற்புறுத்து உதவி வழங்க படையினர் கோரிக்கை

(லண்டன்)

விடுதலைப் புலிகளுடனான தரைச் சண்டையில் ஈடுபடுமாறு சிறிலங்கா அரசு தம்மை வற்புறுத்தி வருவதாக விமானப்படையினர் முறையிட்டுள்ளனர். தரைச் சண்டையில் ஈடுபட தம்மால் முடியாது எனவும், தரைச் சண்டையில் ஈடுபடுவதாயின் தாம் பதவியிலிருந்து விலக தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ள இவர்கள் இவ்விடயத்தில் தமக்கு உதவுமாறு உலக சமூகத்தை கோரியுள்ளனர்.

சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்தவர்களில் ஒரு பகுதியினர் கையொப்பமிட்டு பி.பி.சிக்கு எழுதியுள்ள கடிதமொன்றில்,

உலகில் எந்தவொரு நாட்டிலுமே தரைமார்க்கமான போருக்கு விமானப்படையினரை ஈடுபடுத்துவது கிடையாது என்றும்,

ஆனால், சிறிலங்கா அரசு அண்மைக் காலமாக திருமலையில் விசேட தளம் ஒன்றை அமைத்து அங்கு எமக்கு குறுகியகால தரைப்பயிற்சியும் காடுகளுக்கான கெரிலாப் பயிற்சியும் வழங்கிய பின் விடுதலைப் புலிகளுடன் சண்டையிட அனுப்பி வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் அதிகளவிலான விமானப்படையினர் புலிகளின்தாக்குதலுக்கு இலக்காகிப் பலியாகி வருகின்றனர் என்றும், அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசின் இந் நடவடிக்கையினால் விமானப் படையினர் விரக்தியடைந்து காணப்படுகின்றனர். அதனால் இவர்கள் சேவையிலிருந்து விலகவும் முன் வந்துள்ளனர். இது தொடர்பாக பலதடவை தமது உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோதும் பதவி விலக அனுமதி மறுக்கப் பட்டதாக தெரிவிக் கப் படுகிறது

இதனைத் தொடர்ந்துதாம் தரைமார்க்க யுத்தத்தில் ஈடு

## எல்லைக்கிராம பாதுகாப்பை பலப்படுத்த உத்தரவு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலுள்ள எல்லைக் கிராமங்களுக்குத் தீவிர பாதுகாப்பு வழங்கும்படி சிறிலங்கா கூட்டுப்படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா உத்தரவிட்டுள்ளார்.

தாக்குதலில் 30 சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டதை அடுத்தே கூட்டுப் படைத் தளபதி இந்த உத்தரவினைப் பிறப்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் திருக்கோணமலை, அம்பாறை மாவட்டங்

## வவுனியாவில் வான்தாக்கு; ஒரு வீடு முற்றாக சேதம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நொச்சிக்குளம், தவசியகுளம் பகுதிகளில் சிறிலங்கா விமானப்படையினரின் இரண்டு குண்டுவீச்சு விமானங்களும் உலங்கு வானூர்தியும் தாக்குதல்களை நடாத்தியுள்ளன.

நேற்று முன் தினம் பகல் 12. 30 மணியளவில் இடம் பெற்ற இக் குண்டுவீச்சு தாக்குதலினால் தவசியகுளம் பகுதியில் ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்தது.

## தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை வாரத்தில் இருமுறை பார்வையிட அனுமதி

(கொழும்பு)

தென்னிலங்கையிலுள்ள தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த அரசியல் கைதிகளைஉறவினர்கள் வாரத்தில் இரு தடவை சென்று பார்வையிட முடியும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

## ஐ. நா. குழு மன்னார் விஜயம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அகதிகள் நலன்காக்கும் பிரிவைச்சேர்ந்த அதிகாரிகள் குழுவொன்று இன்று திங்கட்கிழமை மன்னாருக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளது. இந்தக் குழுவில் அகதிகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் பலரும்

## வீடுபார்க்கச் சென்ற பெண் ராணுவத்தின் சூட்டுக்கு பலி

ஏழாலை வடக்கிலுள்ள தனது வீட்டைப் பார்க்கச் சென்ற பெண் ஒருவர் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானார்.

நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது: நாலுபிள்ளைகளின் தாயாராகிய தங்கராசா செல்வராஜேஸ்வரி (வயது 45) என்பவர் இப்பகுதியிலுள்ள தனது வீட்டைப் பார்க்கச் சென்றபோது இராணுவத்தின் துப்பாக்கிச் சூடடிற்கு உள்ளாகி படுகாயம் அடைந்தார்.

இந்நிலையில் யாழ். போதனாவைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டபோதும் சிகிச்சை எதுவும்பலனளிக்காத நிலையில் மரணமடைந்தார்.

## அநுரா - சந்திரிகா முரண்பாடு அதிகரிப்பு

(கொழும்பு)

அநுரா பண்டார நாயக்காவுக்கும், அவரது சகோதரி சந்திரிகா குமாரணதுங்காவிற்கும் இடையில் மோதல்கள் மேலும் அதிகரித்து உள்ளன. கட்சிப் பதவிகளுக்கு தேர்தல் நடத்தும்படி அநுரா பண்டார நாயக்கா கட்சித் தலைவி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தென்பகுதி மாணவர் கடத்தல்; மக்கள் மத்தியில் பதற்றம்

(கொழும்பு)

தென்பகுதியில் மாணவர்கள் கடத்தப் படுவது அதிகரித்துள்ளதை தொடர்ந்து கிராமப்புறங்களில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது

த்திவருகின்றனர்.

கடந்த ஏப்பிரல் மாதம் முதல் ஜூலை 15 ஆம் திகதி வரை இலங்கையில் வடக்குகிழக்குதவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் 874 பாடசாலை மாண

சார் ரூபவாகினி, பத்திரிகைகள், மற்றும் வானொலி மூலமாக மறுத்து வருகின்றனர். என லக்தீப என்ற சிங்களப் பத்திரிகையின் ஆசிரியர் வினி

களின் தளபதி மேஜர் ஜென ரல் ஹமில்டன் வனசிங்கா உத் தரவிட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை நாவ லடிக்கும், மியான்குளத்திற்கு மிடையில் விடுதலைப் புலி கள் நடத்திய கண்ணிவெடித்

அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் திருக்கோண மலை, அம்பாறை மாவட்டங் கள் உட்பட கிழக்குமாகாணத் தின் பல இடங்களில் சிறி லங்காஇராணுவத்தினர் தேடு

[4 ஆம் பக்கம் பார்க்க]

இதனைத் தொடர்ந்துதாம் தரைமார்க்க யுத்தத்தில் ஈடு பட மறுத்து விமானப்படை யில்மட்டும் சேவைசெய்ய அனு மதிக்குமாறு விமானப்படை

(4 ஆம் பக்கம் பார்க்க)

ராலய பிரதிநிதிகள் பலரும் இடம் பெறவுள்ளனர். இக் குழுவினர் கடந்த பதினைந் தாம் திகதியும் மன்னாருக்கு விஜயம் செய்திருந்தது தெரிந் ததே.

ந்து பதற்றம் நிலவி வருகிறது அங்கு பாடசாலைகள் வெறிச் சோடிக் காணப் படுகின்றன. இது தொடர்பாக சம்பந்தப் பட்டவர்கள் விளக்கமளிக்க வேண்டும் என மக்கள் வற்புறு

களில் 874 பாடசாலை மாண வர்கள் கடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையங்களின் பதி வேடுகள் தெரிவிக்கின் றன. ஆனால் இதனை பொலி

எதிரி கொட் கூறியுள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலிம் தெரிவிக்கையில் மேற் குறிப்பிட்ட காலப்பகுதியில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரியான் பாதையில் பெண் உட்பட பலர் கைது

(கொழும்பு)

பலவேகய 2 இராணுவ நட வடிக்கைகளின் போது கடந்த மாதம் 4 ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினரால் ஒரு பெண் உட்பட சில ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

முல்லைத்தீவைச் சேர்ந்த இராசியஸ் மனோகரி (வயது 21) என்ற பெண் ஊரியான் பாதை யால் பிரதான நிலப்பகுதியிலி ருந்து குடாநாட்டுக்குள் பிர வேசிக்க முற்பட்டபோதுஇவர் கைதானார் என்றும்,

இவர் கடந்த செவ்வாய்க் கிழமை வவுனியா மாவட்ட உயர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார் என்றும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளை திருப்பி அனுப்ப மேற்கு நாடுகள் முயற்சி

(லண்டன்)

இந்தியாவிலிருக்கும் இலங்கை தமிழ் அகதிகள் பெருமளவில் திருப்பி அனுப் பப்படுவதைத் தொடர்ந்து மேற்குலக நாடுகளும் தம்நாடு களில் வசிக்கும் இலங்கைதமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப ஆலோசிக்கக் கூடும் என பி.பி. சி. தெரிவித்தது.

மேற்கு நாடுகள் அகதிக ளுக்கு புகலிடம் அளிப்பது தொடர்பான சட்டங்களை கடுமையாக்கி உள்ளதாகவும், அங்கு வரும் பெரும்பாலான வர்கள் உண்மை அகதிகள் அல்ல எனவும் பொருளாதார காரணங்களுக்காகவே இவர் கள் அங்கு வருவதாக அந்நாடு களில் கருதப்படுவதாகவும் மேலும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

## தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு முடிவு

(கொழும்பு)

தமிழ் அகதிகளைத் திருப்பி அனுபப சுவிஸ் அரசு முடிவு செய்திருப்பதாக தெரியவரு கிறது முற்கட்டமாக இரு நூற்றைம்பது பேர் கொழும் பிற்கு அனுப்பி வைக்கப்பட வுள்ளனர் என்றும் சொல்லப் படுகிறது. கொழும்பிற்கு அனுப்படும் இவர்கள் தத்தம் பிரதேசங்களில் சென்று குடி யேறுவதற்கென சுமார் ஒரு மாதகாலத்துக்கு உதவித் தொகை ஒன்றும் அளிக்கப் படவுள்ளது. இந்த நட வடிக்கை பற்றி ஆராய சுவிஸ் அரசை சேர்ந்த மூன்று அதி காரிகள் தற்போது கொழும்பு வந்து பேச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

சுவிட்சலாந்து நாட்டில் வதி விட அந்தஸ்து பெறாமல் தங் கியிருக்கும் ஐயாயிரம் பேரை கட்டம் கட்டமாக அனுப்பி வைக்கவே சுவிஸ் அரசு முடிவு செய்திருப்பதாகவும், மேலும் சில ஐரோப்பிய அரசுகளும் இது பற்றி ஆராய்வதாகவும் தெரிய வருகிறது.

## புலிகளுக்கு ஆயுதம் வழங்கியது யார் ?

# பாகிஸ்தான் ஐ. நா. சபை தூதுவர் இந்தியா மீது பாய்ச்சல்

(ஜெனீவா)

புலிகளுக்கும், பாகிஸ்தான் அரசுக்கும் இடையே தொடர்பு இருப்பதாக இந்திய அரசு புரளி கிளப்பி வருவதாக பாகிஸ்தானின் ஐ நாவுக்கான தூதுவர் இந்தியா மீது கண் டனம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்காகப் பாகிஸ்தானில் திரு கிட்டு சமீ பத்தில் ஆயுதம் கொள்வனவு செய்தார் எனவும், இந்த ஆயு தங்கள் நான்கு கப்பல்களில் கராச்சி துறைமுகம் ஊடாக ஏற்றிச் செல்லப்பட்டன என வும் இந்தியாவிலிருந்து வெளி வரும் 'பணிக்கர்' என்ற பத் திரிகையில் தெரிவிக்கப்பட் டது. அத்தோடு திரு. கிட்டு ஆயுதக் கொள்வனவின் பின் னர் பாகிஸ்தான் உளவுத் துறையினருடன் பேச்சு நடத் தியதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது

இதேவேளை, இந்திய உள் துறை அமைச்சர் சவானும் இச்செய்தி வெளிவருவதற்குச் சில வாரங்களின் முன்னர் ராஜீவ் காந்தி கொலைக்குத் தேவையான புலனாய்வுத் துறை தகவல்களைவிடுதலைப் புலிகளுக்குக் கொடுத்துதவிய தாகவும் குற்றஞ்சாட்டியிருந் தார்

இந்நிலையிலேயே, பாகிஸ் தானின் ஐ நா. தூதுவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். இதற்கு முன்னர் கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதுவர் மறுப்புத் தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

இது குறித்து ஐ நா. தூதுவர் மேலும் கூறுகையில்; புலிகள் அமைப்புக்கும் பாகிஸ் தான் அரசுக்கும் இடையே தொடர்பு இருப்பதாக இந் தியஅரசுஇல்லாதகதைகளைப் புனைந்து வருகிறது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற் றவை. புலிகளுக்கு பாதுகாப் பளித்து பணமும் கொடுத்து பயிற்சியும் அளித்தவர்கள் இந் தியர்களே என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

## வீரச்சாவு

### வீரவேங்கை செல்வராஜ்

மட்டக்களப்பு இருதய புரத் தில் 29 07.1992 அன்று பிற் பகல் 2.30 மணியளவில் சிறி லங்கா இராணுவத்துடனான மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த வீர வேங்கை செல்வராஜ் (செல்வ ராஜா பாலச்சந்திரன், இரு தயபுரம் மட்டக்களப்பு) என் னும் பேராளிக்கு தமிழீழ விடு தலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## 20 இந்திய மீனவர்கள் சிறில. கடற்படையால் கைது

தனுஷ் கோடிக்கும், கச்ச தீவுக்கும் இடையே மீன்பிடித் துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் சுமார் இருபது பேரை சிறிலங்கா கடற்படை நேற்று முன்தினம் கைது செய் துள்ளது அத்தோடு ஐந்து படகுகளையும் கடற்படையி னர் கைப்பற்றிச் சென்றுள் ளனர்.

அவர்களை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் நர சிம்மராவுக்கும் தமிழக முதல் வர் ஜெயலலிதாவுக்கும், இரா மேஸ்வரம் இயந்திரப் படகு மீனவர் சங்கம் அவசர தந்தி அனுப்பி வைத்துள்ளது.

## மூன்று இலங்கையர் சென்னையில் கைது

### குற்றச்செயல்களுடன் சம்பந்தம்

(சென்னை)

சென்னை எழும்பூர் பகுதி யில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்கள் தொடர் பாக மூன்று இலங்கையர் உட்பட நால்வர் பொலிசா ரால் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

இவர்களிடமிருந்து இருபத் தையாயிரம் ரூபா பெறுமதி யான திருட்டுப் பொருள்கள் மீட்கப்பட்டதாகவும் தமிழகப் பொலிசார் மேலும் கூறியுள்ள னர்.

## உலகத்தில் உயிர்க்கொல்லி பட்டினி உண்டாகக் காரணம் வரட்சி

## வரி விளம்பரம்

### 200 நாடகங்கள்

யாழ்ப்பாணம் பேச்சு வழக்குத் தமிழில் முதன் முதலாக நாடகங்கள் எழுதி அரங்கேற்றிய பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் மாணவர்களில் இன்று நாடகம் எழுதும்ஒரேயொரு மாணவனான 200க்கும் அதிகமான நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள். கெட்டிக்காரர்கள் 25 - முதலாம்பிள்ளை 30- (2887)

### விற்பனைக்கு

கிணற்றுப்பங்குடன் 8 பரப்புத் தோட்டக்காணி அல்வாய் தெற்கில் கிராம சபைக்கு அருகாமையில் உண்டு. தொடர்பு திருமதி ப. சுப்பிரமணியம், அதிபர் அல்வாய் தெற்கு, அல்வாய் [சி/4773]



## "இசைமாலை"

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

**"இசைமாலை"**

நிகழ்ச்சி எதிர்வரும் 04.08.92 நாளை செவ்வாய்க்கிழமை நடைபெற இருக்கின்றது

இடம் : மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு

காலம்: மாலை 8.30 மணி

**நுழைவுச்சீட்டுக்கள்:**

**100/- 50/- 25/- 10/-**

(சி/4814) -செஞ்சோலை நிர்வாகத்தினர்


## கந்தலம உல்லாச விடுதிக்கு நீதிமன்றம் தடைவிதிப்பு

(கொழும்பு)


தம்புள்ளயில்உள்ள கந்தலம என்ற இடத்தில் உல்லாச பயண ஹோட்டல் கட்டும் முயற்சிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் வியாழனன்று தடை விதித்துள்ளது. அத்துடன் மனுதாரருக்கு இடைக்கால நிவாரணம் வழங்கியது.

ஹோட்டல்கட்டுவதற்குரிய காணியை குத்தகைக்கு வழங்குவதை தற்காலிகமாக நீதிமன்ற உத்தரவு இடைநிறுத்தி வைத்துள்ளது.

## வலைப்பந்தாட்ட நடுவர் பயிற்சிக்குவிண்ணப்பிக்கவும்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது. இதில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் வலைப்பந்தாட்டம் பற்றிய அடிப்படை அறிவுள்ளவர்களாக வலைப்பந்துக் குழுக்களில் விளையாடியவர்களாக இருக்கவேண்டும். பயிற்சிமுகாம் கோட்பாடுகள், செயல்முறை என இரு பிரிவுகளாக நடைபெறும். முடிவில் பரீட்சை நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்டவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும். விண்ணப்பங்களை அவ்வப் பகுதி விளையாட்டுப் பொறுப்பாளர்களிடம் அல்லது செயலாளர், யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு, மாவட்டச் செயலகம், கோண்டாவில் என்ற முகவரிக்கு 10- 8- 92 இற்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## 1-ம் ஆண்டுநினைவலைகள்



**வீரவேங்கை தயா**
(செல்லையா பாரதிதேவி)

தாயின் மடியில் 10-11-1974 | தாயக மண்ணில் 03-08-1991

உனதுயிர் எமைப்பிரிந்து ஓராண்டும் ஆனதம்மா
ஊரும் உலகமும் போற்றி வணங்கிட
உனதுயிரை மண்ணுக்கு உவந்தளித்த உத்தமியே-நீ
உயிரின்றிப் போகவில்லை.
உன்னுயிரை விதையாக்கி இன்னுயிர்கள் பல எழுந்து
எம்மினிய தாய் நாடாம் தமிழீழம் மீட்டிடவே
இம்மண்ணில் போராடும்.
கண்ணனைய திருமகளே கலங்கிடாது நாமுமிங்கு
உன் பணியைத் தொடருகிறோம்.

குடும்பத்தினர்

யாழ்ப்பாணம் (2937)


## நல்லூர் உற்சவ கால சேவை

தமிழ் மக்கள் வாழ்வு வளம் பெற
அருள் பாலி நல்லூர் கந்தா
என உன் அடி பணிகின்றோம்.

உற்சவ கால சேவை வழங்கிட

**வருக! வருக!! என அழைக்கின்றது**

பருத்தித்துறை வீதி கல்யாண மண்டப சந்தி அருகாமையில் அமைந்துள்ள எமது விற்பனை நிலையம்.

★குளிர்பானங்கள் ★குறைந்த விலை
★குளிர்களி வகைகள் ★நிறைந்த சேவை
★சிறந்த இட வசதி

**சுவையருவி**

5, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி-4813)


## நினைவு கூருகின்றோம் .
## 1992 - 08 - 03

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் இந்திய இராணுவத்தினர் கைது செய்ய முற்படுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**மகிந்தன்** (முல்லைத்தீவு)
**பரதன்** (யாழ்ப்பாணம்)

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு பாலையடிவெட்டை பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ஆனந்** (அருச்சுனன் ஜெகநாதன் - நாகமுனை, அம்பிலாந்துறை, மட்டக்களப்பு)

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**றிஸ்வான்** (சுந்தரம் - கருப்பட்டை முறிப்பு, முல்லைத்தீவு)

யாழ் - பலாலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கடற்புலி கப்டன் நெல்சன்** (இரத்தினம் ஜெயபாலசிங்கம் - திருப்பூர், மயிலிட்டி)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு - பெரியநீலாவணை - 1 ஐச் சேர்ந்த தமிழ் இளைஞன்

முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினர் பரவலாக மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களின் போது சிலாவத்தை மற்றும் மணலாறு அளம்பில் பகுதியிலும் கொல்லப்பட்ட 5 தமிழர்கள்.

வவுனியா - பாலமோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட இளம்பெண்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ.க வெ. நடவடிக்கையின்போது ஆனையிறவைநோக்கி முன்னேற முயன்ற படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் சரா / சாரா** (இம்மானுவேல் ஜோன்சன்- 31, மத்தியவீதி, உவர்மலை, திருக்கோணமலை)

**2-ம் லெப். கென்றி** (சின்னராசா சிறிரங்கன் - 6-ம் வட்டாரம், கும்புறுப்பிட்டி, திருக்கோணமலை)

**2-ம் லெப். அருண்** (கோவிந்தசாமி அருளானந்தம்- மாதகல் மேற்கு)

**விமலசுந்தரம்** (வீரசிங்கம் தெய்வநாயகம் -மேற்குக் குடியிருப்பு, தம்பலகமம், திருக்கோணமலை)

**சிவா** (செல்லப்பிள்ளை தங்கத்துரை - பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர், திருக்கோணமலை)

## கேள்வி அறிவித்தல்

### வடக்கு கிழக்கு மாகாணசபை - நிர்மாணத்திணைக்களம்

மேற்படி சபையின் கீழ்வரும் கேள்விகள் யாழ்ப்பாணம்

மேற்படி சபையின் கீழ்வரும் கேள்விகள் யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள நிர்மாணத்திணைக்கள பிரதம பொறியியலாளரினால் 1992 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 19 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப் படும்.

1. வேலைகளின் விபரம்
   (i) மாவட்ட வைத்தியசாலை வல்வெட்டித்துறை திருத்தவேலை.
   (ii) ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை நீர்விநியோக குழாய் திருத்தவேலை.
   (iii) வைத்தியசாலை கோப்பாய் திருத்தவேலை.
   (iv) வைத்தியசாலை சாவகச்சேரி திருத்தவேலை.

2. ரூபா இரண்டு லட்சத்துக்கு(2,00,000/-) அல்லது அதற்குமேற்பட்ட தொகைக்கு கட்டடங்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் இக்கேள்விக்களுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையோராவர்.

3. மேற்படி கேள்விப் பத்திரங்களை 1992 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி வரை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், நிர்மாணத் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி வைப்புக்கு சமர்ப்பிக்கவேண்டிய கீழ்கண்ட வைப்புப் பணத்தை ஏதாவதொரு கச்சேரியில் அல்லது நிர்மாணத் திணைக்களம், நிறைவேற்று பொறியியலாளர் கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைப்புச் செய்துகொள்ளலாம்.

| வேலைகளின் விபரம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|
| 1. மாவட்டவைத்தியசாலை வல்வெட்டித்துறை திருத்த வேலை | ரூபா 250/- | ரூபா 1400/- |
| 2. ஆதார வைத்தியசாலை - பருத்தித்துறை நீர் விநியோக குழாய்திருத்த வேலை | ரூபா 150/- | ரூபா 600/- |
| 3. வைத்தியசாலை கோப்பாய் திருத்தவேலை | ரூபா 250/- | ரூபா 900/- |
| 4. வைத்தியசாலை சாவகச்சேரி திருத்தவேலை | ரூபா 250/- | ரூபா 1000/- |

கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்க முடியும். அத்துடன் விபரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விதாரர் தனியார் கம்பனிகளாயின் அவை தமது தற்போதைய பணிப்பாளரினதும் பங்குதாரரினதும் பெயர்களைக் குறிப்பிட வேண்டும்.

**முக்கிய குறிப்பு :**

கட்டடப் பொருள்கள் தட்டுப்பாட்டினைக் கருத்தில்கொண்டு மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கு தேவையான கட்டடப் பொருள்கள் வைத்திருப்போர் அல்லது இவற்றை கொள்முதல் செய்யக்கூடியவர்கள் மட்டும் கேள்விகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.


கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
3-08-92

**சி. கா. விநாயகரத்தினம்**
பிரதம பொறியியலாளர்
நிர்மாணத் திணைக்களம்
வடமாகாணம்.

(சி/4790)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம்
18
—
12
—
1973



வீரச் சாவு
18
—
07
—
1991

## 2-ம் லெப். குமுதன்
(வைத்திலிங்கர் தயாளன்)

தமிழீழம் காத்திடவே
எம் தரணியிலே ஒருவராக
தன்மானன் துணிவுடனே
புறப்பட்டாய் புலியாக
ஆனையிறவுப் போரினிலே
வீரமுடன் வீறுகொண்டு
உன் உயிரைக் கொடுத்தாயே
ஓராண்டு ஆனதையா
ஓயவில்லை உன் நினைவு
உன் இலட்சிய தாகம் நிறைவு பெற
பிரார்த்திக்கிறோம் உன்பெயரால்.

ஆகாயக் கடல்வெளிப் போரில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்கட்கும் எமது அஞ்சலிகள்.

03. 08. 92 திங்கட்கிழமை இன்று எமதில்லத்தில் நடைபெறும் வைபவத்தில் தமிழீழத்திற்காகப் போராடும் போராளிகளையும், உற்றார், உறவினர், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

அப்பா, அம்மா, அக்கா
அண்ணா, உறவினர்கள்.

(2932)

ருப்பு, தோப்பூர், திருக்கோணமலை)

**பாண்டியன்** (செல்வராசா சிவநாதன் - நாயன்மார் திடல். தம்பலகமம், திருக்கோணமலை)

**முத்துக்குமார்** (அருந்தவராஜா அங்கயற்கண்ணன்- 215, திருஞானசம்பந்தர்வீதி, திருக்கோணமலை)

**குமணன்** (பரமகுமார் தியாகராஜா - 4-ம் குறுக்குத் தெரு, திருக்கோணமலை)

**இன்பம்** (நடராசா ரஞ்சித்குமார் - கச்சாய் வீதி, சாவகச்சேரி)

**பிரதீப்** (நாகமுத்து செல்வராசா - கப்பல்புலம், புன்னாலைக்கட்டுவன்)

**சஜீத்** (தம்பையா லோகநாதன் - சம்பூர், மூதூர், திருக்கோணமலை)

**சர்வேஸ்** (முருகேசு தவேஸ்வரன் - பன்குளம், திருக்கோணமலை)

**கிட்லர்** (பத்தின்யன் பரணீதரன் - 5-ம் கொலனி, மூதூர், திருக்கோணமலை)

**கப்டன் திலகா** (ரதீஸ்வரி இராசதுரை - 6ஆம் வட்டாரம், சேனையூர், மூதூர், திருக்கோணமலை)

**லெப். சுமேத்திரா** (ஜெயந்தினி வேலாயுதபிள்ளை - கல்மேடு, பாடசாலையடி, கல்குடா, மட்டக்களப்பு)

**2-ம்லெப். நிசாந்தி** (லட்சுமி வைத்திலிங்கம் - குஞ்சம் ஒழுங்கை, காட்டுவளவு, வல்வெட்டித்துறை)

**முகிலா** (தேவிகா ஞானப்பிரகாசம் - வெலிங்டன்சந்தி, கண்டாவளை, கிளிநொச்சி)

**தயா** (பாரதிதேவி செல்லையா - 74/1, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்)

**சுபத்திரா** (வாணிபுவனேந்திரன் - நறுவலடி ஒழுங்கை, வல்வெட்டித்துறை)

**சுபாசினி** (புஸ்பா சுப்பிரமணியம் - உடுத்துறை வடக்கு, தாளையடி)

**பவி** (புஸ்பசாயினி சிவசுப்பிரமணியம் - காளிகோவிலடி, விளானை, களபூமி, காரைநகர்)

**கப்டன் தும்பன்** (சின்னத்தம்பி சூரியமூர்த்தி - சிவன் கோயிலடி, மட்டுவில் தெற்கு)

மட்டக்களப்பு - சிறுத்தையன்கல் பகுதியில், சுகயீனம் காரணமாக எம்மைப்பிரிந்த -

**2-ம்லெப். சுந்தரேஸ்வரன்** (கணபதிப்பிள்ளை சந்திரன் - 1-ம் வட்டாரம், முனைக்காடு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4812]

### சிந்தனைக்கு

ஏகாதிபத்தியம், இறைவனை மறுதலிப்பதாகும். தெய்வத்தின் பெயரால் தெய்வத்திற்கு ஒவ்வாத செயல்களை அது செய்கிறது.

— மகாத்மாகாந்தி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 03- 08- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

# சிங்கங்கள் துவள்கின்றன

சிறிலங்கா காலாற்படையில் ஆட்களைச் சேர்ப்பதற்கான கல்வித்தகைமை வழமையைவிடக் குறைக்கப்பட்டுள்ள அதேவேளை, இராணுவத்தில் சேருவோருக்கு வேறும் பல சலுகைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. இராணுவத்தில் பெரும் ஆட்சேர்ப்பிற்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் வெளிவந்துள்ள இச்சலுகை அறிவிப்புக்கள், ''இராணுவ ஆள் சேர்ப்பதற்காக அண்மையில் விளம்பரம் செய்யப்பட்ட போது மிகக் குறைவானவரே விண்ணப்பித்தார்கள்" என்ற சுதந்திரக்கட்சி எம். பி அனுருத்தா ரத்வத்த கூறியதை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது.

இதனை மேலும் உறுதிப்படுத்துமாப் போல், பல சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியியே இராணுவத்தில் இருந்து சொல்லாமல் கொள்ளாமல் ஓடிய நாலாயிரத்துக்தும் மேற்பட்ட இராணுவத்தினருக்கு அரசாங்கம் அளிக்க முற்பட்ட சலுகை ஆகும். சர்வதேச நியமனங்களின்படி இராணுவத்திலிருந்து ஓடியவர்கள் கைது செய்யப்பட்டு இராணுவ நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும். பின்னர், அதற்குரிய தண்டனை வழங்கப்படவேண்டும். ஆனால், சிறிலங்கா அரசாங்கம் அதைத்தான் மேற்கொள்ளாது விட்டதோடு அல்லாமல், தற்பொழுதுஅவர்களுக்குச் சலுகையும்காட்டியுள்ளது.

''இரண்டாம் கட்ட ஈழப் போர்" 1990ஆம் ஆண்டின் மத்தியில் ஆரம்பித்தபோது, இராணுவத்திற்கு பெரும் ஆள்சேர்ப்பு இடம்பெற்றது. அப்பொழுது இராணுவத்திற்சேர காலிமுகத்திடலிலும், இராணுவ முகாம்களின் முன்பாகவும் சிங்கள இளைஞர்கள் பல நாட்கள் காத்துக்கிடந்தார்கள். இவர்களைப் பார்த்து ''புலிகளை ஒழிக்கப் புறப்பட்டு விட்ட சிங்கங்கள்'' என அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தொலைத் தொடர்ப்பு சாதனங்களும், மக்கள் தொடர்பு சாதனங்களும், பேரினவாதப் பத்திரிகைகளும் பிரசாரத்தில் ஈடுபட்டன. ரூபவாகினியிலும், பத்திரிகைகளிலும் இராணுவத்தில் சேர காத்து நின்ற சிங்கள இளைஞர்களின் படங்களும், பேட்டிகளும் பிரசுரிக்கப்பட்டன.

ஆனால், இன்று இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதற்கு சலுகைகளை அறிவிக்க வேண்டிய நிலை சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது...

# ஜெயலலிதாவின் மதுரை மாநாடு;
# திரைக்கதை இல்லாத திரைப்படம்

எதுக்கு வந்தோம்? கூடினோம்? கலைந்தோம்னு புரியவில்லை. முதல்வர் மிக உயர்ந்தவர் என்று தெரிந்துகொள்ளவா வந்தோம்? எம். ஜி. ஆர். காலத்தில் நடந்த மாநாடுகளில் இந்தளவு ஆடம்பரம் இருக்காது. ஆனால் தொண்டர்களை இழுக்கும் ஒரு தனிக் கவர்ச்சி இருக்கும். இப்போது அது மிஸ்ஸிங்...

இது ஜூன் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் ஜூன் 29ஆம் திகதி திங்கட்கிழமையும் மதுரையில் அ. இ. அ.தி. மு. க. நடத்திய வீரவரலாற்றின் வெற்றி மாநாடு பற்றி அக்கட்சித் தொண்டர் ஒருவர் வெளியிட்ட கருத்து.

## வெள்ளிச் சிம்மாசனம்

இந்த மாநாட்டில் வைத்து ஜெயலலிதாவிற்கு வெள்ளிச் சிம்மாசனம் ஒன்று மறப்பாக்கம் வேலாயுதம் என்பவரால் வழங்கப்பட்டது. அந்த சிம்மாசனத்தின் மதிப்பு சுமார் இருபது லட்சம் ரூபாய்க்கு மேலே இருக்கும் என்று தெரிகிறது. இந்த சிம்மாசனத்திற்காக மொத்தம் இருபது மாதிரிகள் கொடுத்தும், அதை மேலிடம் ஒப்புக்கொள்ளாத நிலையில் இறுதியில் 'நிஜமான ராஜ சிம்மாசனம்' ஒன்றின் மாதிரி கொடுக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டதாம். இச் சிம்மாசனத்தில் 'யாளி' முகம் இருப்பதால் அதில் தெய்வீகத் தன்மை வந்ததாகவும், அதனால் அதில் உட்காருவதற்கு முன்பாக 'சாந்தி பூஜை' செய்யப்பட வேண்டுமெனவும் கூறப்பட்டது. அதனால் பரிசளிக்கப்படுவதற்கு சில நிமிடங்கள் முன்பாக மேடையின் பின்புறத்தில் வைத்து அச் சிம்மாசனத்திற்கு விசேட பூஜை நடத்தப்பட்டது.

## பகுத்தறிவுப் பாதையில்...

இது ஈ. வே. ராமசாமிப் பெரியாரும், சி. என். அண்ணாத்துரையும் பகுத்தறிவுப் பாதையில் வளர்த்த திராவிட இயக்கத்தின் இன்றைய நிலைக்கு ஒரு எடுத்துக்காட்டு என்றால் மாநாடு முழுவதையும் ஒரு சாமியார் தான் நடத்தினார் என்பது போனஸ் தகவல் ஆகும்.

மதுரை மாநாட்டின் போது அரசாங்க அதிகாரிகள் பயன்படுத்தப்பட்டதாகவும், அரசாங்கப் பணம் செலவிடப்பட்டதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டிக் கொண்டிருக்க — ஜெயலலிதாவின் அமைச்சர்கள் தாமே நேரில் நின்று மாநாடு நடத்தியதாக மார்தட்டிக்கொள்ள இந்தப் புது தகவலும் இடையில் வெளியாகியது. மதுரை தமிழ்நாடு ஓட்டலில் அமைச்சர் செங்கோட்டையனின் அறை... யாரின் 'அருள்வாக்கு' பெற்ற பின்பே காலையில் பல்துலக்குவது முதல் மாநாட்டின் இலவசச் சாப்பாட்டிற்கு அடுப்பு பற்ற வைப்பது வரை அனைத்துக் காரியங்களும் ஆரம்பிக்கப்பட்டதாம். குஷன் நாற்காலியில் வீற்றிருந்த சாமியாருக்கு ஒரு புறத்தில் பழங்களும், மறுபுறத்தில் ஜூஸ் டம்ளர்களும் குவிந்திருக்க ஏகப்பட்ட உபசரிப்பு. இதைவிட மாலை நேரத்தில் ஓட்டலின் தோட்டத்தில் சாமியார் நடைபயில்வதற்கு பாதுகாப்பு அதிகாரிகள் வேறு நியமிக்கப்பட்டிருந்தனர்.

...யில் ஆரம்பித்தபேரணி திடுதிடுப்பென வேல் காவடி, பால் காவடி, மயில் காவடி, றவைக் காவடி என்று பக்திப் பரவசமாக மாறியது.

''பேரணி பதினாறு மணி நேரத்தைத் தாண்ட வேண்டும்'' என்ற மேலிட அறிவுரைக்கிணங்க மூன்று மூன்று பேராக ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. முதல்வரின் தரிசனத்தைப்பெற வந்த கூட்டம் உடனே கடக்காமல் நிற்க பொலிசாரின் தள்ளுமுள்ளு ஆரம்பமாகி இறுதியில் குண்டாந்தடிப் பிரயோகத்தில் போய் முடிந்தது.

பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதற்கு மட்டும் நாற்பத்து நான்கு லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து நானூற்றி அறுபத்தெட்டு ரூபாவை (44, 44, 468 ரூபா) தமிழக அரசு செலவிட்டுள்ளது. இதைவிட சின்னச் சின்னப் பத்திரிகைகளில் வந்த விளம்பரங்கள் பல்வேறு கூட்டுறவு ஸ்தாபனங்கள் தந்த விளம்பரங்கள் எல்லாம் சேர்ந்தால் தமிழக அரசின் விளம்பரச் செலவு மட்டும் சுமார் முக்கால் கோடி ரூபாவைத் தாண்டும் என்று சொல்லப்படுகிறது.

முன்னாள் அமைச்சர் ஆர்.

## மதுரை மாநாட்டின் மற்றொருபக்கம்

முதல்வர் ஜெயலலிதா மதுரையில் தங்குவதற்கென பல லட்சம் ரூபாய் செலவில் கண்ணும் கருத்துமாக தயார் செய்யப்பட்ட சுற்றுலா விருந்தினர் விடுதியில் ஜெயலலிதா தங்கவே இல்லை. அசோக் ஓட்டலில் அவர் தங்குவதற்கென விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அசோக் ஓட்டலிலும், அதற்கு நேரெதிரே இருக்கும் தமிழ்நாடு ஓட்டலிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பரபரப்பாகின சூட்கேசுகள் மற்றும் பெரிய பைகளுடன் வந்தவர்களை பொலிஸ் உள்ளே அனுமதிக்கவே இல்லை ரிசப்ஷன் அருகே சற்று நேரம் தரித்து நின்ற நிருபர்கள் கண்டது பொலிசாரின் அடிதடிக் காட்சிகள் தான். இந்த ஓட்டல்களில் தங்கும் அறை கேட்டு சட்ட மன்ற உறுப்பினர் பலர் கூட தகராறு செய்தனர்.

### பேரணியில் குழப்பம்

மாநாட்டுக்கான பேரணி மதுரை தெப்பக்குளம் அருகே நண்பகலில் ஆரம்பமாகியது திடீரென எந்தவிதமான முன்னறிவிப்புமில்லாமல் கிளம்பிய பேரணியை கவிஞர் இளந்தேவனும் - சுதாசேவுய்யனும் நேர்முகவர்ணனை செய்தனர் எதுகை மோனைகளோடு தமுக்கம் திடலுக்கு அருகே பேரணியைப் பார்வையிடுவதற்கென முதல்வருக்காக அமைக்கப்பட்ட மேடைக்கு ஜெயலலிதா இரண்டரை மணி நேரம் தாமதித்து வந்து சேர்ந்தார்.

இதில் சிதறியோடிய கூட்டத்தால் பாதிக்கப்பட்டது முதியவர்கள் மற்றும் பெண்களும் குழந்தைகளும். இந்த அமளியில் ஜெயலலிதா கட் அவுட் ஒன்று உடைந்து நொருங்கி விழுந்தது மதிற்சுவர்கள் சவுக்குக் கட்டைத் தடுப்புக்கள் தாண்டிக் குதித்து பாய்ந்தனர் சிலர். அவ் இடத்திற்கு மின்னல் வேகத்தில் விரைந்த பொலிஸ் அதிபர் தேவாரமும் பொலிஸ்துணை ஆணையாளர் சண்முகநாதனும் சல்லிக்கட்டு காளைகள் போல் துடிப்பாக செயல்பட்டுக் கொண்டிருந்தனர். பேரணி அவ் இடத்தை விட்டுக் கடந்து சென்ற பின்னர் கிழிந்து போன துணிகளும், நூற்றுக்கணக்கான செருப்புக்களும் அங்கு சிதறிக் கிடந்தது.

### எம்.ஜி.ஆரின் நிலை

மாநாட்டை முன்னிட்டு திரும்பிய பக்கமெல்லாம் வானத்தை உரசி நின்ற ஜெயலலிதா கட் அவுட்டுகளுக்கு இடையே எம் ஜி ஆர் படத்தை தேடிப்பிடிப்பதே சிரமமாக இருந்தது மொத்தம் மூன்று எம்.ஜி.ஆர் படங்கள் தான் வைக்கப்பட்டிருந்தது மாநாட்டுப் பந்தலில் ஒன்று, தேவர் சிலை அருகே ஒன்று, தமுக்கம் மைதானப்பகுதியில் ஒன்று. தேவர் சிலைக்கு அருகே இருந்த எம். ஜி. ஆர். கட்ட அவுட்டுக்குகண்ணீருடன் வந்த பல தொண்டர்கள் தீபராதனை காட்டி வணங்கிக் கொண்டிருந்தனர்.

மாநாட்டையொட்டி...

எம். வீரப்பனும், சாத்தூர் சிங்கம் என்று வர்ணிக்கப்படும் சாத்தூர் ராமச்சந்திரன் ஒரு மூலையில் அமர்ந்திருந்தனர். எனினும் எவரும் அவர்களுடன் பேசக்கூட இல்லை. ஆர். எம். வீரப்பனுக்கு அருகிலிருந்த எஸ். டி. சோமசுந்தரம் அந்தப் பக்கமே திரும்பிப் பார்க்கவில்லை. ''திருவிழாவுக்காக மஞ்சள் குளிப்பாட்டி மாலை போட்ட ஆடு போல இருந்தது ஆர். எம் வீரப்பனின் நிலை என்று ஜூனியர் விகடன் வர்ணித்துள்ளது. கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருந்த சினிமா தயாரிப்பாளரான கோவைத் தம்பியும், சைதை துரைச்சாமியும் ஜெயலலிதா மதுரைக்கு புறப்படும்போது விமான நிலையத்தில் அவரை வழியனுப்பி வைக்க வந்த போது இவர்கள் இருவருக்கும் விசேட அழைப்பு தரப்பட்டது.

காங்கிரஸ் கட்சி நடத்திய திருப்பதி மாநாட்டுக்கு அ. இ அ. தி. மு. க. வுக்கும் அழைப்பு தரப்பட்டதும், அமைச்சர் கண்ணப்பன்கலந்துகொண்டதும் தெரிந்ததே. ஆனால் மதுரை மாநாட்டுக்குத் தோழமைக் கட்சியான காங்கிரஸ் உட்பட எந்தக் கட்சிக்கும் அழைப்பு இல்லை. சமீபத்தில் எல்லா பெண் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஜெயலலிதாபட்டுப்புடைவை வழங்... சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் 'நாங்ககூட மாநாட்டுக்கு வரலாமில்லே' என்று கேட்ட போது ஜெயலலிதா நேரடியாகப் பதில் கூறவில்லையாம். மாநாட்டு மண்டபத்தில் நடந்த பிரின்ஸ் தங்கவேல் என்னும் அ.தி.மு. க சட்டமன்ற உறுப்பினரின் திருமண வைபவத்தில் கலந்து கொள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் காங்கிரஸ் தடைவிதித்தது.

### ஜெயலலிதாவின் பேச்சு

மாநாட்டில் இரண்டேகால் மணி நேரம் ஜெயலலிதா பேசியபோதும் குறிப்பிடக் கூடியதாக எதுவும் விசேடமாக இருக்கவில்லையாம். பக்கம் பக்கமாக டைப் செய்யப்பட்ட நீண்ட உரையை குரலில் எந்த ஏற்ற இறக்கமும் இல்லாமல் ஜெயலலிதா மைக்கின் முன் நின்று படித்து முடித்தார். உரையின் பெரும் பகுதி கிட்டத்தட்ட ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாறுதான். 'உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு உயிரூட்டப்படும்' என்றும், உலகத் தமிழ்மாநாடு விரைவில் நடத்தப்படும்' என்றும் ஜெயலலிதா மாநாட்டில் தெரிவித்தார்.

ஜெயலலிதாவின்உரையைக் கேட்ட தொண்டர்களில் பெரும்பாலானோர் ஏமாற்றத்தையே பிரதிபலித்தனர். இத்தனை செலவு பண்ணி, இவ்வளவு கூட்டம் கூட்டி இவ்வளவு கஷ்டப்பட்டு நாம வந்தது எல்லாம் எதுக்கு? புரட்சித் தலைவர் மன்றமாநாடு கூட்டியபோது; தொண்டர்கள் ஒரு கத்தி வெச்சிக்கனும்னாவது சொன்னாரே. இங்க அது கூட இல்லயே என்று மாநாட்டுப் பந்தலிலேயே பலர் அலுத்துக் கொண்டனர். மொத்தத்தில் திரைக்கதை என்பதே இல்லாமல், ஆரம்பத்திலிருந்து கடைசி வரை பிரமாதமான செட்டுகள், ஜிகினா மயமான கனவுக் காட்சிகள் தொடர்ந்து பார்த்துப் பிரமித்துப் போய் கைதட்டி விட்டு வெளியே வந்த பரிதாபமான நிலையில்தான் அ. தி. மு. க. வின் மதுரை மாநாடு நிறைவு பெற்றுள்ளது...

பதற்கு சலுகைகளை அறிவிக்க வேண்டிய நிலை சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது. இந் நிலையானது, போரின் கடுமையை பற்றி சிங்கள இளைஞர்கள் முதலில் அறிந்திருக்காமையும், போரில் வெற்றி குறித்து ஏற்பட்டுள்ள சந்தேகமுமே காரணமாகும்.

1990இல், இராணுவத்திற்குச் சேரவென சிங்கள இளைஞர்கள் திரண்டவேளை அவர்கள்மனக் கண் முன் நின்றது. ஜே. வி. பியினரை இராணுவம் அடக்கியவிதமே. அதாவது எதிர்ப்பு எதுவுமின்றி, பயந்தோடும் தமிழ் இளைஞர்களைத் துரத்திப் பிடித்து அழித்துவிடுவதே தமது பணி என அவர்கள் எண்ணினார்கள். அத்தோடு, வேலையற்றிருந்த இளைஞர்களுக்கு சம்பளமும் கிடைக்கும் இதேவேளை, வசதியான வேளைகளில் தமிழர் உடைமைகளையும், தமிழ்ப்பெண்களின் மானத்தையும் சூறையாடிக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையும் ஆகும். இந்நம்பிக்கைக்குக் காரணங்களுமிருந்தன. கடந்த காலத்தில் தமிழர் பிரதேசங்களில் கடமையாற்றிய சிப்பாய்கள் பலர் தெற்கில் திடீர் பணக்காரராகியிருந்தனர். இதேவேளை, மத்தியதரவகுப்பைச்சேர்ந்த கல்விகற்ற ஒரு பிரிவினர் அதிகாரிகளாக உத்தியோகம் பார்ப்பது பாதுகாப்பானது என்ற நினைப்பில் அதிகாரிகள் தரத்தில் இணைய முன்வந்தனர்.

ஆனால், இவர்கள் எதிர்பார்த்தது போன்று யுத்தம் ஓடிப்பிடித்து விளையாடும் விளையாட்டாக இருக்கவில்லை. கடுமையானதாக பேரிழப்பை உண்டு பண்ணுவதாக இருந்தது சாதாரண சிப்பாயில் இருந்து உயர் இராணுவ அதிகாரி வரையிலும் யுத்தத்தில் உயிர்ப்பாதுகாப்பு கேள்விக்குரியதாக இருந்தது. அத்தோடு முப்படைகளில் எப் படைப்பிரிவில் இருப்பினும் எப்பதவியில் இருப்பினும் உயிராபத்திற்கான வாய்ப்புகள் உண்டு என்பதை கடந்த இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட போர் உணர்த்தியது. தற்பொழுது சிங்களசிப்பாய்கள் இதனைப்புரிந்து கொண்டுள்ளனர். அத்தோடு போர் விரிந்து செல்லும் போக்கானது இராணுவ வெற்றி ஒன்று எட்டப்படமுடியாது என்பதையும் அவர்களுக்கு உணர்த்தியது. இதனால் அவர்கள் விரக்தியும், மனச்சோர்வும் அடைந்துள்ளனர். இவை இராணுவத்திற்குஅப்பால், சிங்கள இளைஞர்கள் மத்தியிலும் தற்பொழுது பரவியுள்ளது.

இருப்பினும், வேலையில்லாத் திண்டாட்டமும் விலை வாசி ஏற்றமும் அதனால் உருவாகிவரும் வறுமையும் அதிகரித்துவரும் இவ்வேளையில், சிங்கள கிராமப்புற இளைஞர்களை இராணுவத்தின்பால் ஈர்ப்பதுமிகப்பெரும் நெருக்கடியாகசிங்கள அரசிற்கு இருக்கமுடியாது என்றேகூறலாம். இதனை மேலும் உறுதிப்படுத்துவதற்காகவே சிங்கள அரசாங்கம் சலுகைகளை தொடர்ந்து அறிவித்து வருகின்றது.

---

செங்கோட்டையனின் அறையில் தங்கியிருந்த அந்தச் சாமி

நதார்.

யானைப் படை, குதிரைப் படை, என்று சரித்திரப்பாணி

அ.தி.மு.க. ஆட்சியின் ஒரு வருட சாதனைகளைப் பிரபல

கும் வைபவம் நடந்தபோது காங்கிரசைச் சேர்ந்த பெண்

ளது.

தொகுப்பு: ஜூனியர் விகடன்

---

# அமெரிக்கா மிரட்டுவதாக ஈராக் குற்றச்சாட்டு

(பக்தாத்)

குவைத்தில் இராணுவ ஒத்திகைகளில் ஈடுபட்டிருப்பதன் மூலம் அமெரிக்கா மிரட்டுவதாக ஈராக் குற்றம் சாட்டியுள்ளது.

பக்தாத்தில் ஆளும் பாத் கட்சியின் கூட்டமொன்றில் பேசிய ஈராக்கின் துணை அதிபர் தாகா யாசின் ரமதான் மேலும் கூறுகையில், அமெரிக்க அதிபர் புஷ் ஈராக் மீது புதிய மிரட்டலை விடுவதாகவும், எந்தத் தாக்குதலையும் சமாளிக்க ஈராக் தயாராக இருப்பதாகவும்குறிப்பிட்டார்

இதனிடையே அமெரிக்கா மேற்கொள்ளும் இந்த கூட்டு இராணுவ ஒத்திகையானது ஈராக்கை ஆத்திரமூட்டுவதற்கானது அல்ல என்றும், பாரசீக வளைகுடாப் பிராந்தியத்தில் அமெரிக்கா பாதுகாப்பை பராமரிக்க தயாராக இருக்கிறது என்பதை சவூதி அரேபியா குவைத் மற்றும் வளைகுடா நாடுகளுக்கு உறுதி அளிப்பதற்காகவே நடத்தப்படுகிறது என்றும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக் ஷேனி கூறியுள்ளார்.

குவைத்மீது ஈராக் படையெடுத்து இன்று இரண்டாவது ஆண்டு பூர்த்தியடைவது குறிப்பிடத்தக்கது.

## மருத்துவக்கல்லூரிகளை மூட தமிழக அரசு உத்தரவு

(சென்னை)

தமிழகத்தில் இருக்கும் அனைத்து மருத்துவக் கல்லூரிகளையும் காலவரையறையின்றி மூடிவிடுமாறு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது

அத்துடன் கல்லூரி விடுதிகளிலிருந்து எல்லா மாணவர்களையும் வெளியேறி விடுமாறும் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் சென்னை நகரிலுள்ள மூன்று மருத்துவக் கல்லூரிகளிலும் பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.

## பெற்றியாட் ஏவுகணைகள் குவை. வழங்கப்பட்டன

(குவைத்)

ஸ்கட் ஏவுகணைகளைஅழிக்கும் ''பெற்றியாட்'' ஏவுகணைகள் குவைத்திற்கு வழங்கப்பட்டுள்ளன அமெரிக்காவினால் வழங்கப்பட்ட இந்த ஏவுகணைகள் ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதலில் இருந்து குவைத்தைபாதுகாக்கவே பொருத்தப்படுகிறது எனவும் முன்னரே இது திட்டமிடப்பட்டிருந்தது எனவும் குவைத் ராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இவ் ஏவுகணைகள் பொருத்தப்பட்டதற்கும் ஈராக் மீது அமெரிக்கா இராணுவ தாக்குதலுக்குத் திட்டமிடுவதற்கும் தொடர்பு எதுவுமில்லை எனவும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

## ஐ. நா. கட்டடத்தை மூடவேண்டிய நிலை

ஐக்கிய நாடுகள் சபையை நிர்வகிக்க உலக நாடுகள் வழங்கிவரும் நிதியை அவை வழங்கத் தவறினால் ஐக்கிய நாடுகள் சபைக் கட்டடத்தை டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் மூடவேண்டிய நிலை ஏற்படும் என்று ஐ. நா. சபையின் பொதுச் செயலாளர் பூட்டாஸ்காலி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐ. நா. சபை தற்போது சுமார் 240 கோடி ரூபா கடனில் இருப்பதாகவும் ஆனால் அமெரிக்காவிடம் சுமார் 2,500 கோடி ரூபா நிதிப்பாக்கி உள்ளதாகவும் ரஷ்யாவிடம் சுமார் 120 கோடி ரூபா நிதிப்பாக்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்

## 179 ஆவது நாடாக ஜோர்ஜியா

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஜோர்ஜியாவை அதன் 179 ஆவது உறுப்பு நாடாக நேற்று முன்தினம் சேர்த்துக் கொண்டது. சோவியத் யூனியன் சிதறுண்ட பின்னர் ஜோர்ஜியா பொதுநல சோவியத் குடியரசுகள் அமைப்பில் சேர்ந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கூட்டம்

வலி. வடக்குப் பிரதேச சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் அனைத்து அங்கத்தவர்களையும் வரும் புதன் கிழமை (5. 8. 92) பிற்பகல் நான்கு மணிக்கு சுன்னாகம் கந்தரோடையிலுள்ள தமிழ் கந்தையா பாடசாலையில் நடைபெறும் ஒன்று கூடலில் கலந்து கொள்ளுமாறு பிரதேச அத்தியட்சகர் கேட்டுள்ளார்.

★ ★ ★

வேலணை கிழக்கு நேதாஜி சனசமூக நிலைய கூட்டம் வரும் புதன் கிழமை (5-8-92) பிற்பகல் 4-00 மணிக்கு றக்கா வீதியில் உள்ள தல்வாவை பிள்ளையார் கோவிலில் நடைபெற உள்ளது நிலைய உறுப்பினர்களை கலந்து கொள்ளுமாறு மேற்படி நிலையம் கேட்டுள்ளது.

## இன்று

(நல்லூர்)

இன்று ஆரம்பமாகும் தெய்வீக இசை அரங்கில், மங்கள இசை இடம்பெறும். மங்கள இசையினை கே. ஆர். சுந்தரமூர்த்தி, கே. செல்வரத்தினம் குழுவினர் நடத்துவர். கே. ஆர். புண்ணியமூர்த்தி, கே. நித்தியானந்தம், எஸ். ராமதாஸ், என். கணேசன் தவில் வாசிப்பார்கள்.

## மாவீரர் கூட்டம்

(மல்லாகம்)

வலிகாமம் பிரிவில், ஆடி மாதத்தில் வீரமரணமடைந்த மாவீரர்களின் நினைவுதின கூட்டங்கள் ஒவ்வொரு வட்டவை ரீதியிலும் நடத்தப்பட்டன. இறுதியாக, கடந்த வெள்ளிக்கிழமை இணுவில் சைவமகாஜனாக் கல்லூரியில் நினைவுதினக்கூட்டமும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## 175 ஆவது நிறைவு விழா

(சுன்னாகம்)

இலங்கையிலேயே, மிகப் பழமையான கல்லூரியான தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தன்175ஆவது வருடநிறைவை கொண்டாடுகிறது. 1816 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியின்175ஆவதுவருடநிறைவுவிழா நிகழ்வுகள் விரைவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளன. (11)

## விளையாட்டுக் கழகத்தின் 32ஆவது ஆண்டுவிழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 32ஆவது ஆண்டு விழாவும், விளையாட்டுப் போட்டியும் பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில்கழகத்தலைவர் திரு. இ. இராசநாதன் தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவிலே பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ச. முருகேசபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசில்களை வழங்கினார். இவ் வைபவத்திலே வர்த்தகர் திரு. பொ. இராசதுரை, தொழிலதிபர் திரு. வின்சென்ற் டீ போல், சாண்டோ துரைரத்தினம் ஆகியோரும் உரையாற்றினர். திரு. ச. நந்தகுமார் நன்றியுரை வழங்கினார். இரவு நிகழ்ச்சியாக பருத்தித்துறை கலைஞர் வட்டத்தினரின் ''சுதந்திரநாட்டுஅடிமைகள்'' நாடகமும் இடம் பெற்றது. (25)

ஈழநாதம்

# நாடு திரும்பும் அகதிகளை பராமரிக்க 10 இலட்சம் டாலர் நிதியுதவி

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பும் இலங்கை அகதிகளின் பராமரிப்புக்கென அமெரிக்கா கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் பத்து இலட்சம் அமெரிக்க டாலர்களை வழங்கியுள்ளதாக புனர்வாழ்வு புனர் நிர்மாண அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி சில்வா தெரிவித்தார்.

பத்திரிகையாளர்மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் அவுஸ்திரேலியாவும் இதற்கென நிதி உதவி வழங்க முன்வந்திருக்கிறது எனவும், இந்தியாவில் அகதிகளாக இருக்கும் தமிழர்களை கூட்டி வரும் வேலை இன்று ஆரம்பமாகின்றது எனவும், தெரிவித்தார்.

திங்கட்கிழமைகளிலும்வியாழக்கிழமைகளிலும் அகதிகளை இந்தியன் எயர்லைன்ஸ் விமானங்கள் ஏற்றி வரும். தினமும் நான்கு விமானங்கள் இதற்கென பயன்படுத்தப் படும் என்று அறிவித்திருந்தது தெரிந்ததே.

ஜனவரி 22 ஆம் திகதி முதல் மே 15 ஆம் திகதி வரை 6,940 குடும்பங்களைச் சேர்ந்த 23,109 பேர் அழைத்து வரப் பட்டுள்ளனர்.

## 31-ம் நாள் நினைவலைகள்



வீரஜனனம்: 30-10-72

வீரச்சாவு: 03-07-92

### லெப். ரமணன்

(காளிமுத்து முருகானந்தன்)

(அடம்பன், மன்னார்)

**ரமணன் எங்கே?**

மன்னார் மண்ணின்
அடம்பன் ஊரிலே
காளிமுத்துவின் செல்வனே
எங்கள ரமணன் எங்கே
உயரமான உன் உருவம் எங்கே
எம் நெஞ்சைவிட்டு நகருமோ
பாதைகள மாறலாம்
உன் இலட்சிய நினைவுகள் மாறாது
ரமணன் ரமணன் என்றொலி எங்கு கேட்கும்
உன் புன்சிரிப்பு இனி எங்கு தெரியும்
காலகாலமாய் தமிழமண்ணில் ஓடி விளையாடியவனே!
இன்று உன் கால்தடம் பதியாத மண்வெளிகள் உண்டா?
கட்டைக்காட்டில் காடையரை பாடையில் அனுப்பியவனே
இன்று நீ மீளாத்துயில் கொள்கின்றாயே ஏன்?
இயக்கச்சயில் உன் உடல் அழிந்ததா
இல்லை இலட்சியத்திற்காக அழிந்தது
ரமணா உன் உடல் மண்ணிற்கு உரமானது
அதை நீ மகிழ்வோடு ஏற்றுக்கொள்
மகிழ்வான தமிழீழம் பிறக்கும்
தமிழ் மண்ணில் புலிக்கொடி பறக்கும்.

---நண்பர்கள்

(சி/4799)

# நல்லூர்க் கந்தன் திருவிழா இன்று ஆரம்பம்

(நமது நிருபர்)

நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பமாகி 29 ஆம் திகதி வைரவர் உற்சவத்துடன் நிறைவுறும்.

இன்று பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகும். வரும் 12 ஆம்திகதிமாலை 5 00மணிக்கு மஞ்சத் திருவிழாவும், 21 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு கார்த்திகைத் திருவிழாவும், 22 ஆம் திகதி காலை 7-00 மணிக்கு சந்தான கோபாலர் உற்சவமும், மாலை 5.00 மணிக்கு கைலாச வாகனமும், 24 ஆம் திகதி காலை 7.00 மணிக்கு தண்டாயுதபாணி உற்சவமும்25ஆம்திகதிமாலை 5.00மணிக்குசப்பறமும், 26-ம் திகதி காலை 7.00 மணிக்கு தேரும். 27 ஆம் திகதி தீர்த்தமும் 28ஆம் திகதி மாலை5.00 மணிக்கு பூங்காவனமும் நடைபெறும்.

## கல்விமேம்பாட்டு கழகம்

(நமது நிருபர்)

மருதனார்மடம் கல்விக் கோட்டத்திலுள்ள உரும்பராய் கொத்தணியில் கல்வி மேம்பாட்டு கழகமொன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது

ஊரெழு சி. சி. த. க. பாடசாலையில் இன்று மாலை 3. 00 மணிக்கு இக்கழகம் ஆரம்பித்து வைக்கப்படும்.

இந்த வகுப்புகளில் ஆண்டு 5 இற்கும் ஆண்டு 11 இற்கும் இடையில் கல்விகற்கும் மாணவர்களை கலந்துகொண்டு பயன்பெறுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மருதனார்மடக் கல்விக்கோட்டப் பிரிவினரின் செய்திக்குறிப் பொன்று தெரிவிக்கிறது.

## தென்பகுதி

462 மாணவிகளும் 412 மாணவர்களும் கடத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு கடத்தப்பட்டவர்களில் இதுவரை முப்பது பேர் மட்டுமே தேடிக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளனர்.

இதேவேளை பாணந்துறை பிரதமமந்திரி மகாவித்தியாலய உயர்தர வகுப்பில்மாணவி ஒருவர் அதிபரின் அனுமதியின்றி ஒருவாரமாக அதிபர் மாணவியை அழைத்து விசாரணை நடத்தியபோது அம் மாணவி கறுப்பு உடைதரித்த சில அண்ணன்மார்களே தன்னை மேற்படி வகுப்பில் இருந்து கல்விகற்குமாறு பணித்ததாக கூறியுள்ளார். சக மாணவிகளிடம் இதுதொடர்பாக வினவியபோது இந்த மாணவி தனது தந்தையிடம் பயுறோ வாகனம் இருப்பதாகவும் சகல இடங்களையும் அதில் சென்று பார்வையிடலாம் எனக்கூறி தம்மை வீட்டிற்கு வருமாறு பலதடைவைகள் அழைத்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி விசாரணையை மேற்கொண்ட பொலிசார் மாணவி சித்தசுவாதீனமற்றவர் என கூறியுள்ளனர்.

ஆனால் அதிபர் விசாரணை மேற்கொண்டபோது அங்கு பத்திரிகையாளர்களும், பல அரசியல்வாதிகளும் இருந்தனர். அங்கே மாணவி சாதாரண நிலையிலேயே காணப்பட்டார் இதிலிருந்து பொலிசார் உண்மையைமறைப்பதற்காக இவ்வாறு கூறியுள்ளனர் என்பது தெளிவாகிறது எனக் குறிப்பிட்ட பத்திரிகை ஆசிரியர், பொலிசார் இவ்விடயத்தில் போதிய அக்கறை செலுத்தவில்லை எனவும் கண்டித்துள்ளார்.

## அநுரர்

சிறியாவோவிற்கு சவால் விடுத்துள்ளார். கட்சித் தேர்தலை நடத்தினால் சதிகாரர்கள் அம்பலமாவார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

## சிறிலங்கா

யினர் தமது தளபதியிடம் கோரியுள்ளனர்.

இவர்கள் இது தொடர்பாக உலக அரங்கில் விவாதித்து தமக்கு விமோசனம் பெற்று

## ஆறாம்மாத நன்றிநவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 10 - 12 - 1924

மறைவு 10 - 03 - 1992

### சின்னர் மயிலு

(குடமியன் வரணி)

அன்னாரது அந்தியேட்டிக் கிரிகைகள் 03-08-1992 திங்கள் இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இக்கிரிகைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்

கோகிலா கூல்பார்
கொடிகாமம்.
இராஜேஸ்வரி பலசரக்கு மளிகை

மனைவி,பிள்ளைகள்.

(சி/4810)

## ஒலிம்பிக்போட்டிகள் -1992

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சுதந்திரக் குடியரசின் பொதுநலஅமைப்பு | 24 | 16 | 18 |
| அமெரிக்கா | 17 | 19 | 17 |
| ஜெர்மனி | 14 | 10 | 16 |
| சீனா | 09 | 14 | 06 |
| ஹங்கேரி | 09 | 07 | 02 |
| அவுஸ்திரேலியா | 06 | 08 | 06 |
| கனடா | 05 | 01 | 05 |
| தென்கொரியா | 06 | — | 01 |
| ஸ்பெயின் | 06 | — | — |
| ருமேனியா | 04 | 05 | 06 |
| பிரான்ஸ் | 04 | 04 | 11 |
| இத்தாலி | 04 | 04 | 07 |
| பிரிட்டன் | 04 | 03 | 03 |
| ஜப்பான் | 03 | 05 | 05 |
| போலந்து | 03 | 04 | 04 |
| கியூபா | 02 | 02 | 05 |
| செக்கோஸ்லோவாக்யா | 02 | 02 | 01 |
| துருக்கி | 02 | 01 | — |
| பல்கேரியா | 01 | 04 | 01 |
| நியூசிலாந்து | 01 | 03 | 03 |
| நோர்வே | 01 | 02 | — |
| பிரேசில் | 01 | 01 | — |
| எசுத்தோனியா | 01 | — | — |
| கிரேக்கம் | 01 | — | — |

## மரண அறிவித்தல்கள்

வேலணை

### திரு. கார்த்திகேசு செல்லத்துரை

வேலணை கிழக்கு 2-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடத்தை வசிப்பிடமாகக்கொண்டவருமான கார்த்திகேசு செல்லத்துரை காலமாகி விட்டார்.

இவர் பராசக்தியின் அன்புக் கணவரும்,காலஞ்சென்ற கார்த்திகேசு கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற தில்லையம்பலம் செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், ஸ்கந்தராஜா (வீடமைப்புத் திணைக்களம், யாழ்ப்பாணம்) அனுஷலெட்சுமி, ஸ்ரீதரன் (பிரான்ஸ்), ஸ்ரீபாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி செல்வரூபி ஸ்கந்தராஜா (கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்), கந்தையா (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் கிளிநொச்சி), குமுதினி (பிரான்ஸ்), சிவமாலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ் சென்ற ஆறுமுகம், காலஞ் சென்ற பொன்னையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், இரத்தினம் (பாலசிங்கம் கனடா), செல்வராஜா (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ் சென்ற குமாரசாமி, செல்லத்துரை, இராசமணி, தவமணி (டென்மார்க்), புவனேஸ்வரி, கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிஷாந்தி, மயூரி, தர்சிகா, நிரூஷா, தாரணி, இலக்கியா, சங்கீதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் (3-8-1992) இன்று திங்கட் கிழமை பி.ப. 1 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;

66,1 யா/இந்துமகளிர் கல்லூரி, ஒழுங்கை,

செ ஸ்கந்தராஜா (மகன்)

கொடிகாமம். (சி/4810)

# 1-ம்ஆண்டுநினைவுஅஞ்சலி



| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 27 – 03 – 1976 | 03 – 08 – 1991 |

## வீரவேங்கை தர்மிளா

(கனகு கௌரி)

தமிழீழம் வெல்கவென எம்
தாயகத்தில் ஒருத்தியாக
புனித மண்ணின் மானம் காக்க
புறப்பட்டாய் புலியாக
ஆனையிறவுப் போரினிலே
அஞ்சாத நெஞ்சத்துடன் வீரமுடன் போராடி
வீரச்சாவை அடைந்தவளே
சரித்திரத்தைப் படைத்துவிட்டு
சடுதியில் எம்மைவிட்டு மறைந்தாயோ
கனக்கும் எம்விழிகளின் நீருற்றை
காணிக்கைப் பூவாக உனக்கு செலுத்துகிறோம்.

உன்பிரிவால் துயருறும்,

செல்வபுரம், தாய், தந்தை, சகோதரிகள்,
உரும்பராய் தெற்கு. அத்தான், உற்றார், உறவினர்கள்.

(2938)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11 – 08 – 1921 | 04 – 07 – 1992 |

அமரர்

## வைத்திலிங்கம்–வேலும்மயிலும்

(முன்னாள் துறைமுக கூட்டுதாபன உத்தியோகத்தர்... ஊழியர்) 

வட்டு-மேற்கு, வட்டுக்கோட்டை

தமிழ்த்தாய் தலை நிமிர்ந்து நிற்க
தவப்புதல்வர்களை ஈந்த தந்தையர் வரிசையில்
அகமகிழ்ந்து நின்றீர் -ஆனால்
கால வெள்ளம் யாரைத்தான் விட்டது!
எந்தையே தங்கள் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

–உயர் கலைக்கல்லூரி அதிபர்,
ஆசிரியர்கள்
-புதிய உயர் கலைக்கல்லூரி அதிபர்,
ஆசிரியர்கள்

(2943)

தமக்கு விமோசனம் பெற்று தருமாறு பி.பி.சியை இக் கடிதம் மூலம் கேட்டுள்ளனர்

### எல்லைக் கிராமம்

தல் என்ற போர்வையில் பல இடையூறுகளைமேற்கொண்டு வருகின்றனர்.

இத்தேடுதல் காரணமாகக் கடந்த இரண்டு தினங்களாக மட்டக்களப்பிலிருந்து கொழும்பு சென்ற பஸ்கள் உட்பட அனைத்து வாகனங்களும் இராணுவத்தால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

உன்னிச்சை, கஞ்சிகுடிச்சாறு மொறவே, பாலம்போட்டாறு ஆகிய பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஊரியான்

இவர் மீதான விசாரணை இன்னும் முடியாததால் மேல் விசாரணைக்காக காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே நேரம் இந்தப் பெண்ணுடன் கைதான மேலும் சில ஆண்கள் பற்றி இதுவரை தகவல் பெற முடியாதிருப்பதாக தப்பி வந்த சிலர் கூறியுள்ளனர்.

ஹெலிகொப்டர் தாக்குதலுக்கு அஞ்சி மறைவிடம் ஒன்றில் பதுங்கிய போது இராணுவத்தினர் அவர்களை கைது செய்தனர் என்றும், பின்னர் அவர்கள் உழவு இயந்திரத்தில் ஏற்றி வரப்பட்டுள்ளனர் என்றும் தப்பி வந்தோர் தெரிவித்துள்ளனர்.

கைதானோரில் மேற்படி பெண் மாத்திரமே அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு வவுனியா கொண்டு வரப்பட்டுள்ளார். ஏனையோரின் நிலை பற்றி அறிந்து கொள்ள உறவினர்கள் பெரும்முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

(மகன்)
சந்தர்மடம். (வேலணை)
யாழ்ப்பாணம். (2944)

## இராசையா நல்லம்மா

சரவணை மேற்கைச் சேர்ந்த இராசையா நல்லம்மா அவர்கள் 01-08-92 அன்று காலமானார். இவர் பிரபல வர்த்தகர் அப்பாக்குட்டி இராசையாவின் அன்பு மனைவியும், சிந்துராசா (கொழும்பு வர்த்தகர்), விவேகானந்தன் (ஜேர்மனி), சிவானந்தன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரவீந்திரன்(செட்டிகுள வர்த்தகர்), ராமநாதன் (பாலன், செட்டிகுள வர்த்தகர்), திருமதி குலசிங்கம் ஜெயகௌரி, சுத்தானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியை 02-02-92 நேற்று 82 A, சீனியர் லேன் கலட்டி யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:

[2945] ந. குலசிங்கம் [மருமகன்]
இளைப்பாறிய அஞ்சல் அதிபர்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

02- 08- 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5997

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
28-6546, 40-7207, 27-5535, 27-1255, 27-1573, 24-6663, 27-9489, 24-6348, 28-1794, 43-0916, 28-9327, 28-2829, 25-1958, 25-6081, 25-5888, 25-8805.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
24-7161, 26-767, 26-535, 27-6524, 27-8754, 24-6065, 24-2545, 42-1464, 22-6535, 26-375, 27-8999, 42-1750, 24-6972, 28-6020, 24-5121.